**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

2024 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 12-ம் தேதி வாதி தரப்பு சாட்சி வா.சா.1-ன் வாக்குமூலம் 1989ம் ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி எஸ்.விஜய் அழகிரி, பி.காம்.,பி.எல்., என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

நி.வே. இ.ம.எண்.2/2023 ல் நி.வே.இ.ம.எண்.1/2022 இல் நி.வே.ம.எண்.155/2006

வா.சா.1 தாமோதரன்

**முதல்விசாரணை தொடர்ச்சி:-**

1. 24.03.1990 ஆம் ஆண்டில் S.P.சிவானந்தம் ஈரோடு, ஸ்பின்னிங் மில்ஸ் பிரைவேட் லிமிடெட் ன் Joint Managing Director ஆக நியமிக்கப்பட்ட தீர்மானத்தின் நகல் **ம.சா.ஆ.1** ஆகும். (1வது எதிர்மனுதாரர் தரப்பில் அசல் தாக்கல் செய்யாமல் True copy என்பதால் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படவேண்டுமென்று கோரி ம.சா.ஆ.1 குறியீடு செய்யப்படுகிறது ).

2. 27.02.1990 ஆம் ஆண்டில் S.P.தாமோதரன், S.P.சிவானந்தன் மற்றும் S.P.மகேந்திரன் ஆகியோர் அவர்களுக்குள் எழுதிக்கொண்ட பரிவர்த்தனை பாககரா பஞ்சாய்த்தின் நகல் **ம.சா.ஆ.2** ஆகும்.( எதிர்மனுதாரர்கள் தரப்பில் மேற்படி ஆவணத்தில் தரப்பினர்களின் கையெழுத்து இல்லை என்பதால் ஆட்சேபணையின்பேரில் குறியீடு செய்யக்கோரி ஆட்சேபணையின்பேரில் குறியீடு செய்யப்படுகிறது).

3. 04.10.1994 ஆம் ஆண்டில் ம.சா.ஆ.2ன்படி செய்துகொண்ட பாகப்பிரிவினைக்கு உண்டான Memorandum of Partition **ம.சா.ஆ.3** ஆகும்.

4. நிறைவேற்று மனு எண்.155/2006ல் 1வது எதிர்மனுதாரரான ஈரோடு, ஸ்பின்னிங் மில்ஸ் பிரைவேட் லிமிடெட் ஐப் பொறுத்து தள்ளுபடி செய்யப்பட்ட உத்தரவு மற்றும் மனுவின் நகல் **ம.சா.ஆ.4** ஆகும்.

5. 30.10.2009 ஆம் ஆண்டில் நான் கொடுத்த வழக்கறிஞர் என்.ஜெகநாதன் என்பவருக்கு வக்காலத்தின் நகல் **ம.சா.ஆ.5** ஆகும்.

6. நி.வே.இ.ம.எண்.1/2022 ல் எனக்காக அறிவிப்பு பெற்றுக்கொண்டதை காட்டுவதற்கு அந்த மனுவின் நகல் **ம.சா.ஆ.6** ஆகும்.

7. 03.09.2009ம் தேதியில் நி.வே.ம.எண்.155/2006ல் பிறப்பித்த உத்தரவைக் காட்டுவதற்கு உண்டான நகல் **ம.சா.ஆ.7** ஆகும்.

மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**குறுக்குவிசாரணை 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில்**

1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பு வழக்கறிஞர்கள் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.